20 பிப்ரவரி 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 7 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக சமூக நீதி தினம்**



# தீர்ப்பிடாதீர்கள், நீங்கள் வாழ்வீர்கள்

நம் அன்றாட வாழ்வில் பகிர்ந்துகொள்வதும், பழிவாங்குவதும் மனிதனின் இயற்கையான குணம். இது நம்மில் பலரிடம் காணப்படும் குணம் அல்லது பண்பு. பிறரை விரைவாகத் தீர்ப்பிடுகிறோம். அல்லது மிக விரைவாகக் கண்டிக்கிறோம். ஆனால் இயேசு கொடுக்கும் மாறுபட்ட போதனை விண்ணகத்தின் இயல்பை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. மனித வாழ்க்கையில் நாம் எளிதில் தீர்ப்பிட்டு கண்டனம் செய்கிறோம். விண்ணகத்தில் அப்படி இல்லை. “பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்” இந்த உலகில் ‘கண்ணுக்கு கண்’ என்ற பழமொழி நம்மை எதிர்கொள்கிறது. வலிமை வாய்ந்தவர்களும், செல்வந்தர்களும் அவர்களுடைய அதிகாரத்தையும், செல்வத்தையும் குவித்துக்கொண்டிருக்கும் உலகில் இதனால் மற்ற மக்களின் மீது ஏற்படும் விளைவுகளைக் கருத்தில் கொள்ளாமல் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

இயேசு விண்ணகம் அல்லது மண்ணகம் இதில் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்கிறார். நம்மோடு ஒத்துப்போகாதவர்களை வகைப்படுத்துவது இயல்பானதாகத் தோன்றினாலும், தீர்ப்பளிக்க அல்ல. குறைவான மக்கள் பயணம் செய்யும் பாதையே விண்ணகத்திற்கு செல்லும் பாதை. நம் பகைவர்களை எவ்வாறு அன்புசெய்ய வேண்டும்? நன்மை செய்வது, அவர்களுக்காக செபிப்பது, இன்னும் பகைவர்களை ஆசீர்வதிப்பது என்று இயேசு எடுத்துக்காட்டுகிறார். சில நேரங்களில் இதைச் செய்வது மிகவும் கடினம்.

தாவீதுக்கு சவுலைக் கொல்ல மிக எளிதாக வாய்ப்புக்கிடைத்தும் அவருக்குக் இரக்கம் காட்டி அவரின் உயிரைக் காப்பாற்றியது ஒரு எடுத்துக்காட்டு. நேர்மையாளராக இருந்து, இரக்கம் காட்டுவது கடவுளின் சக்திவாய்ந்த ஒரு பண்பு. கடவுள் எவ்வாறு நினைக்கிறார் என்றும் விண்ணகம் எப்படிப்பட்டதென்றும் தெரிந்துகொள்ள இறைவன் ஒரு கதவைத் திறக்கின்றார். அனைவர் மீதும் அன்பு என்பது ஒவ்வொரு திருப்பத்திலும் அதிகமாகத் தெரிகிறது. இதை நிறைவேற்றுவது அவ்வளவு எளிதானது அல்ல என்பது இயேசுவுக்கும் தெரியும். எனவே இதற்காக நமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தருகிறார்.

இந்த உலகில் நாம் செய்யும் அனைத்து நற்செயல்களுக்கும் நமக்கு கைமாறு உண்டு என்று நற்செய்தி நமக்கு வாக்குறுதியளிக்கிறது. இதில் மிகவும் தெளிவான வாக்குறுதி என்னவென்றால், நாம் பிறரை மன்னித்தால் தான் நமக்கும் மன்னிப்பு உண்டு. இதைத் தான் ஆண்டவர் கற்றுக்கொடுத்த இறைவேண்டலில் நாம் மன்றாடுகின்றோம். இயேசு அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார், எந்த அளவையால் நீங்கள் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கு அளக்கப்படும். நம்முடைய அளவீட்டின்படி தான் கடவுளும் அவருடைய வழிகளில் அவருடைய நிபந்தனைகளின்படி நம்மை அவர் வீட்டிற்குள் அனுமதிக்கிறார். நமக்குள் பதுங்கியிருக்கும் எதிரிகளை விடுவித்து, ஆண்டவரின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள நாம் தயாரா? ஏனென்றால் அவ்வாறு செய்வதால் மட்டுமே நாம் நிரந்தரமாக விடுவிக்கப்படுவோம். ✣

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

... புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்.

(யோவான்: 13:34)

**இன்றைய வாசகங்கள்:**

1 சாமுவேல் 26: 7-9, 12-13, 22-23;

திபா: 103: 1-4, 8,10,12-13;

1 கொரி: 15: 45-49;

லூக்கா: 6: 27-38

INTERNAL CIRCULATION ONLY
BUL 08/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org